**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.156 of 2020**

**Prosecution Witness**:PW7

| | | | |
|---|---|---|---|
| Name | இளங்கோ(PW7) | Caste | |
| Father Name | நடராஜன் | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | ஈரோடு | Religion | |
| Taluk | ஈரோடு | Age | 53 |
| District | ஈரோடு மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July **2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் நான் அவிநாசி வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் சேவூர் காவல் நிலைய குற்ற எண் 3/2020 சட்டப்பிரிவு 279, 337, 304(A) இதச வின் கீழ் உதவி ஆய்வாளர் அன்பரசன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட புலன் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.05.2020 ஆம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337, 304(A) இதச வில் இருந்து 279, 304(A) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சாஆ.6) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.05.2020ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் வேலுமணி என்பவரை விசாரித்து TN 42 J 8015 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ 7) ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அன்றைய தினமே இறந்து போன கிஷோர் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சத்தியராஜ் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த **பிரேத பரிசோதனை**

**அறிக்கை (அசாஆ.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.05.2020 இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) of IPC ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. சாட்சிகளை நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தவறாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒருதலை பட்சமாக குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை:–** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |